[1993 ஏப்ரல் 28

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. அமர் நாத்.

திரு. ஓ. எஸ். அமர்நாத் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே நெசவுத் தொழிலினுடைய நலனை முன்னிட்டு நமது மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசு நெசவாளர்களுக்காக கைத்தறி கூட்டுறவு நெசவு சங்கங்களை கடன் உதவியுடன் அமைத்து கொடுக்கின்றது. அந்த கடன் உதவியுடன் அமைக்கும் அந்த நேரத்திலே கைத்தறி நெசவினுடைய உதிரிபாகங்கள் மழைக் காலங்களிலே மிகவும் சிரமமான முறையிலே உற்பத்தி பண்ண முடியாத அளவுக்கு பழுதடைந்து விடுகிறது. கைத்தறி கூட்டுறவுச் சங்கங்களுக்கு கடன் கொடுக்கின்ற நம்முடைய கூட்டுறவுத் துறை, நெசவுத் துறை இந்தமாதிரி ஒரு கஷ்டமான காலங்களில் உதிரிப் பாகங்களை வாங்குவதற்கோ அல்லது பழுது அடைந்த உதிரி பாகங்களுக்கு நிதியுதவி செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் கோடிட்டுக் காட்டினேன். கடந்த ஆண்டுகூட உபகரணங்கள் 5,496 நெசவாளர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அதற்கு முந்திய ஆண்டு 8,169 தறி உபகரணங்கள் வழங்கப்பட்டிருக்கிறது. தறி உபகரணங்கள், ஜாக்காடு, விழுது, அச்சு போன்றவைகள் வழங்கப்படடும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 509, டாக்டர் பெ. வீரபாண்டியன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

509—

குப்பநத்தம் அணைக்கட்டு கட்டுமானப் பணி.

*9786— டாக்டர் பெ. வீரபாண்டியன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதியில் 'குப்பநத்தம் அணைக்கட்டு' கட்டுமானப் பணிக்கான நிர்வாக ஒப்பளிப்பு அரசுக்கு வரப்பெற்றுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், திட்டத்தை செயல்படுத்தும் செயற் கூறிப்பு அரசிடம் உள்ளதா ?

1993 ஏப்ரல் 28]

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இத்திட்டத்திற்கு அரசின் நிர்வாக ஒப்புதல் இது வரை அளிக்கப்பட வில்லை.

(ஆ) இத்திட்டத்திற்கான மதிப்பீடு ரூ. 1,566 இலட்சங்களுக்கு மதிப்பீடு அரசுக்கு அனுப்பப்பட்டு, அரசினுடைய பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் பெ. வீரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே செங்கம் தொகுதி மிகவும் பிற்பட்ட தொகுதி, தொழில் துறையிலும் வளர்ச்சி இல்லை, விவசாயத்திலும் வளம் இல்லை. கல்வியிலும் பின்தங்கி உள்ளது. சிறுதொழில் கூட அறவே இல்லை. இல்லை இல்லை என்ற நிலைதான் எங்கள் தொகுதியில் அதிகம் உள்ளது. சுருங்கக் கூறின் செங்கம் தொகுதி கடைமடையாகவே இதுநாள் வரை இருந்து வருகிறது. விவசாயத்தை நம்பி தான் செங்கம் தொகுதி மக்கள் வாழ்கிறார்கள். பாசன வசதி அறவே இல்லை. குப்பநத்தம் கிராமத்தைச் சுற்றி ஜவ்வாது மலை இருக்கிறது. மழைக் காலங்களில் வழிந்துவரும் நீர் தேவையற்று கடலில் கலந்து வீணாகிறது. எனவே இந்த வீணாகும் தண்ணீரை தேக்கிதான் குப்பநத்தம் அணைக் கட்டு வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறேன். "நீர் இன்றி அமையாது உலகெனின் யார்யார்க்கும்—வான் இன்று அமையாது ஒழுக்கு"—நீர் இல்லாமல், ஒழுக்க நெறியில் நின்று மக்கள் ஒரு நாளும் உயிர் வாழ முடியாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள்.

டாக்டர் பெ. வீரபாண்டியன் : செங்கம் தொகுதி முழுக்கவும் கலசபாக்கம் மற்றும் செங்கம் மத்திய மாநில பண்ணை ஆகிய இடங்கள் பாசனத்தில் பயன்பெற்று விவசாயம் தழைக்க வாய்ப்பு உள்ளது. எனவே, அமைச்சர் அவர்கள் இதை விரைவில் பரிசீலிப்பாரா என கேட்க விழைகின்றேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே ஏற்கனவே நான் தெரிவித்தபடி செய்யாறினுடைய குறுக்கே குப்பநத்தம் அருகே நீர்த் தேக்கம் கட்டுவதற்காக விரிவான திட்ட மதிப்பீடுகள் நம்முடைய பிளானிங் அன்ட் டிசைன் டிப்பார்ட்மென்ட் மூலம் தயாரிக்கப்பட்டு. 15 கோடியே 66 இலட்சம் ரூபாய்க்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னேன். இருக்கின்ற நிதி ஆதாரத்தைப் பொறுத்து. ஒவ்வொரு

ஆண்டும் பகுதி 2 திட்டத்தின்கீழும் பல்வேறு திட்டங்களை, நீர்த் தேக்கத் திட்டங்களை எடுத்துக் கொண்டு வருகிறோம். இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன். இதனுடைய பயன் விகிதாசாரமும் ஓரளவுக்கு ஒத்துவருகின்ற காரணத்தாலே நிதி ஆதாரத்தைப் பொறுத்து இதை செய்யலாம் என்று அரசு கருதுகிறது. வனத் துறையின் மூலம் 32 ஏக்கரும் பட்டா நிலங்களின்மூலம் 452 ஏக்கரும் புறம்போக்கு நிலங்கள் ஏறத்தாழ 250 ஏக்கரும் கையகப்படுத்த வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இதை எல்லாம் பரிசீலனை செய்து இதற்கான முடிவுகளை அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இருக்கிற நிதி ஆதாரங்களைப் பொறுத்து, வருகிற நிதியாண்டிலே இதற்கு முன்னுரிமை கொடுக்கலாமென்று அரசு கருதுகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் பெ. வீரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய செங்கம் தொகுதி சார்பாக நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். அங்கே நிலம் கையகப்படுத்துவதிலே எந்தவித பிரச்சினையும் இல்லை. ஏனென்றால் அங்கு இருக் கின்ற அத்தனை பொதுமக்களும் விருப்பம் தெரிவித்திருக்கி றார்கள். அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தை பார்ட்-2 ஸ்கீமில் (இரண்டாவது திட்டத்தில்) சேர்க்க ஆவன செய்வாரா என்று அன்புடன் கேட்க அழைகின்றேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே இதிலே வனத் துறை சம்பந்தப் பட்டிருக்கிற காரணத்தால் அவர்களிடத்தில் அனுமதி பெற வேண்டும் ஆகவே, நிலத்தைக் கையகப்படுத்தும்போது புறம் போக்கு நிலம், பட்டா நிலம், வனத் துறை நிலம் என்று வருகிற காரணத்தாலே, இந்தப் பிரச்சினையை நான் சொன்னேன். ஆகவே, அரசைப் பொறுத்தமட்டில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்டதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 510. திரு. ஆ. அறிவழகன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.